2022ம் ஆண்டில் ஏற்பட்ட கற்றல் இழப்பினை பூரணமாக்குவதற்கான

விசேட பாடத்திட்டம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

# தரம் 6 – முதலாம் தவணை

(2022ம் ஆண்டு ஜுலை 25ம் திகதி தொடக்கம் செப்தெம்பர் 07ம் திகதி வரையான காலப்பகுதியில் மட்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

தகவல் தொழில்நுட்பத் துறை
விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.lk

# அறிமுகம்

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக, போக்குவரத்து சேவைகள் மற்றும் பல்வேறு சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. 2022ம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து பாடசாலைகள் இடையிடையே மூடப்பட வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டது.

பாடசாலைகள் மூடப்பட்ட காலத்தில் நிகழ்நிலை மூலம் தொடர்ச்சியான கல்வியை வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் எதிர்பார்த்த அளவு வெற்றியைப் பெறமுடியவில்லை. இந்நிகழ்நிலை கற்றலிற்கு மாணவர்களின் வருகை திருப்திகரமாக இருக்கவில்லை. ஏனெனில் நிகழ்நிலைக் கல்விற்க்குத் தேவையான இணைய வசதி அணுகல் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மாணவர்கள் மத்தியில் இல்லாமையால் ஆகும்.

இலங்கையின் தொலைதூரக் கல்வி அணுகல் மற்றும் தரம் ஆகியவற்றில் குறைபாடுகள் காணப்படுகிறது. ஆசிரியர்களை மையமாகக் கொண்ட கல்வியை வழங்கும்முறை இலங்கையில் நடைமுறையில் உள்ளது. இந்த அமைப்பில், மாணவர்களை பாடசாலைகளிலிருந்து அந்நியப்படுத்துவது கல்வி கட்டமைப்பில் மோசமான போக்கைக் காட்டியது.

தற்போதுள்ள சவால்களுக்கு மத்தியிலும், குறைந்தபட்சம் ஓரளவாவது பௌதீகப் பாடசாலைகளை நடத்துவது எதிர்கால சந்ததியினரின் கல்வி மட்டத்தை மேம்படுத்த பங்களிப்பு செய்யும். இது தொடர்பாக மாகாண மட்டங்களில் கல்வி அமைச்சினால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முதலாம் தவணைக்கான மொத்த பாடசாலை நாட்களின் எண்ணிக்கை 21 ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டது.

மூன்று நாட்களுக்கு பாடசாலை நடத்தவும், வாரத்தின் மற்ற இரண்டு நாட்களில் மாணவர்கள் வீட்டில் இருந்தே கற்றுக்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. முதலாம் தவணை தொடர்பான பாட உள்ளடக்கத்தை உள்ளடக்கும் வகையில், கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் பாடசாலைகளை பிற்பகல் 2.30 மணி வரை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.

முதலாம் தவணைக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பாடத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளின் எண்ணிக்கை 10. கடந்த பாடசாலை நாட்களில் 06 பாடவேளைகள் நிறைவடைந்துள்ளதாகக் கருதப்படுகிறது. ஜுலை 25 முதல் செப்டம்பர் 7 வரை காலப்பகுதியில் மிகுதியான 04 பாடவேளைகள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்ப, பாடத்திட்டம் அத்தியாவசிய தேர்ச்சி மட்டங்களை உள்ளடக்கியதாக வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

# ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்கள்

- பின்வரும் அட்டவணையானது தரம் 6 பாடத்திட்டத்தை பூரணப்படுத்தும் முகமாக கட்டாயமாக கற்பிக்கப்பட வேண்டியப பாட உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது.
- ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்தின் அடிப்படையில் மேலதிகமாக கட்டாயமாக கற்பிக்கப்பட வேண்டிய பாட உள்ளடக்கங்களை (அட்டவணையில் தரப்பட்ட விடயங்கள் தவிர்ந்த) சேர்த்துக்கொள்ளலாம்.
- தரப்பட்ட பாட உள்ளடக்கங்களை பூரணப்படுத்துவதற்காக ஆசிரியர்கள் "Blended Learning" கற்பித்தல் முறையினை கையாளுமாறு வலியுறுத்தப்படுகின்றீர்கள்.
- பாட அறிவினை மேம்படுத்துவதற்காக மாணவர்களிற்கு "குருகுலம்" மற்றும் "e-thaksalawa" போன்ற கற்றல் சூழ்நிலைகளை பின்பற்ற வழிகாட்டல் செய்யவும்.
- "குருகுலம்" மற்றும் "e-thaksalawa" போன்ற கற்றல் முறையினை பயன்படுத்துவதற்கு வசதியற்ற மாணவர்களிற்கு போதுமான ICT உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும்.

# 2022 இல் ஏற்பட்ட கற்றல் இழப்பினை பூரணமாக்குவதற்கான விசேட பாடத்திட்டம்

**( Recovery Plan for Learning Loss – 2022 )**

*(இந்த பாடத் திட்டம் தரம் 06 முதலாம் தவணையின் 04 பாடவேளைகளில் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறையைத் தக்கவைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.)*

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | ஆசிரியர் வழிகாட்டியில் செயல்பாட்டு எண் | பாடப் புத்தகத்தில் பாடத் தின் பக்க எண் | பாட வேளை கள் |
|---|---|---|---|---|---|---|
| **தவணை 1 இற்கான தரம் 06 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட கற்றல் பேறுகள் மற்றும் பாடங்கள்** | | | | | | |
| 2.கணினிகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதன் அவசியத்தைப் பாராட்டுவர் | 2.2.கணினிளையும் அதன் சாதனங் களையும் பாதுகாப்பாகப் பயன்படுத்துவர் | i. கணினியை ஆரம்பித்தல் /பணிநிறுத்தல் என்பவற்றின் சரியான முறைகளைப் பின்பற்றுவார்<br>ii. கணினிப்பாகங்களை நெறிமுறைக்கமையப் பாவிப்பார்<br>iii. பியோசனமற்ற கணினிளையும் புறச்சாதனங்களையும் பாதுகாப்பான முறையில் அகற்றுவார்<br>iv. கணினியினைப் பாதுகாப்பாகப் | • கணினியை ஆரம்பித்தல் /பணிநிறுத்தல் என்பவற்றின் சரியான முறைகள் (start/shutdown )<br>• கணினியினைப் பயன்படுத்தலின் நெறிமுறைகள்<br>• சரியான தோற்றப் பாங்கு<br>• கணினி வன்பொருட்களைப் பாதுகாப்பான முறையில் அகற்றலும் அழித்தலும்<br>• கடவுச்சொற்களின் பயன்பாடு | 27-30 வரையான பக்கத்தில் காணப்படும் அலகு 2.2 இணைப் பார்க்கவும் | பக்கம் 22 - 31 இணைப் பார்க்கவும் | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | ஆசிரியர் வழிகாட்டியில் செயல்பாட்டு எண் | பாடப் புத்தகத்தில் பாடத் தின் பக்க எண் | பாட வேளை கள் |
|---|---|---|---|---|---|---|
| | | பயன்படுத்துவதை விளங்கி நடைமுறைப் படுத்துவார் | | | | |
| 3.இயக்க முறைமைகளைப் பயன்படுத்துவர் | 3.1 கோப்புகளைக் கையாள்வர் | i. கோப்பொன்றை உருவாக்கிச் சேமிப்பார்<br>ii. கோப்பொன்றைத் திறந்து திருத்தங்களை மேற்கொள்வார்<br>iii. சாரளங்ளை, பெரிதாக்கல் சிறிதாக்கல் பருமன் மாற்றல் போன்றவற்றினை மேற்கொள்வார் | • எளிய வரைதல் மென்பொருளொன்றைப் பயன்படுத்திக் கோப்புகளைக் கையாளுதல்.<br>○ உருவாக்கல் (Create)<br>○ சேமித்தல் (Save)<br>○ திறத்தல் (Open)<br>○ திருத்தல் (Edit)<br>○ மூடுதல் (Close)<br>• சாரளங்களைப் பெரிதாக்கல், சிறிதாக்கல், பருமன் மாற்றல் (window ) Minimizing / Maximizing / Resizing போன்ற செயற்பாடுகளை மெற்கொள்ளல் | 31-38 வரையான பக்கத்தில் காணப்படும் அலகு 3.1 இணைப் பார்க்கவும் | பக்கம் 40 - 43 இணைப் பார்க்கவும் | 02 |
| 4. பிரயோக மென்பொருள்களை | 4.1 வாசக வடிவமைப்பு மற்றும் வரைதல் | i. சுட்டி மற்றும் விசைப்பலகை என்னபனவற்றினை | • சுட்டியினைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்கு | 39-44 வரையான பக்கத்தில் காணப்படும் அலகு 4.1 இணைப் | பக்கம் 55 - 59 இணைப் பார்க்கவும் | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | ஆசிரியர் வழிகாட்டியில் செயல்பாட்டு எண் | பாடப் புத்தகத்தில் பாடத் தின் பக்க எண் | பாட வேளை கள் |
|---|---|---|---|---|---|---|
| பொருத்தமானவாறு பயன்படுத்துவார் | மென்பொருட்களைதிறம்படப் பயன்படுத்துவார் | வினைத்திறனுடன் பயன்படுத்துவார் | வரைதல் மென்பொருளைப் பயன்படுத்தல் | பார்க்கவும் | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | மொத்த பாடவேளைகள் | 04 |